அந்தச் சீட்டுகளை சர்க்கார் பாங்கில் அப்படியே அடமானம் வைத்து பாங்கியிலிருந்து சர்க்காருக்கு பணம் கிடைத்தது. இந்தமாதிரி வசூலான தொகை என்ன என்பது நமக்குத் தெரியும். திருமங்கலத்தில் வசூலான தொகை பூராவும் தெரியும். இதைக் கண்டு திருப்தி மனோபாவம் ஏற்படுமானால் பின்னாடி நமக்கு ஏமாற்றம் ஏற்படும். இந்த வகையில் பணத்தை வசூல் செய்து இந்தியன் பாங்கு, சென்ட்ரல் பாங்கு, பஞ்சாப் நாஷனல் பாங்கு இவைகள் இந்த முறைக்கு நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம் என்று சொல்லிவிட்டால் அப்பொழுது பணம் வசூலாவது தெரியும். மேலும் மேலும் அவர்களையே நம்பியிருக்கக்கூடிய நிலைமை ஏற்படக் கூடாது. கொஞ்சம் யோசித்துப் பார்க்கவேண்டும். ஜனங்களுடைய பணத்தை வசூல் செய்வதற்கு வேண்டிய முறையில் மேலும் மேலும் ஜனங்கள் கையில் வாங்கும் சக்தி வளரவேண்டு மென்று விரும்புகிறோம். அதை வளர்ப்பதற்குப் பதிலாக திருப்தி மனோபாவம் கொண்டிருந்தால் பின்பு ஆபத்தில் கொண்டுபோய் சர்க்காரையே விலைக்கு வாங்கக்கூடிய சில பத்திரிகைகாரர்களாகத்தான் இருக்கப்போகிறார்கள். அவர்களுக்குத்தான் உறுதியாகச் சொல்லாமல் அதை நிறைவேற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. கொஞ்சம் தன்னடக்கத்தோடு உண்மையைப் பரிசீலனை செய்து பார்த்து ஜனங்களிடத்திலே, இருக்கக்கூடிய நிலைமையைக் கொஞ்சம் தெளிவாக எடுத்துக்கூறி ஏற்படுத்தக் கூடிய திட்டங்கள், வாங்கும் சக்தி உயர ஜனங்கள் சர்க்காருக்கு ஏராளமாக கடன் கொடுப்பதற்கு தாங்களாகவே முன்வர வேண்டிய நிலைமை ஜனங்களுக்கே ஏற்படவேண்டும். பெரிய பணக்கார முதலாளிகளை நம்பி இருக்கக்கூடிய நிலைமையில் சர்க்கார் இருக்கக்கூடாது. அப்படித் திட்டம் இந்த மாகாணத்திற்கும் இந்த நாட்டுக்கும் வேண்டுமென்று பாடுபடுகிறோம். அந்தத் திட்டத்திற்கு யோசனையை இன்றைக்கு எடுத்துக் கூறுகிறோம். அந்த யோசனையின் அடிப்படையில் சட்ட சபை போராடவேண்டுமென்பது எங்கள் விருப்பம். அதன் திசையில் பாக்கியிருக்கும் ஜில்லாவிலிருந்து வரும் காலத்தில் விவாதம் செய்து கொள்ளலாமென்று நம்புகிறேன்.''

VIII.—GOVERNMENT BILL.

THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION BILL, 1955 (L.A. BILL NO. 11 OF 1955)—*cont.*

12-59 p.m. DEPUTY SPEAKER :—'' Now we will take up consideration of the Madras Cultivating Tenants Protection Bill, 1955. I hope the House gives permission to the Hon. Minister for Revenue to re-open clauses 3 and 4 of the Bill as he wants to move certain amendments to those clauses? ''

THE HON. SRI M. A. MANICKAVELU :—'' I crave the permission of the House to re-open clauses 3 and 4 and to move the following amendments:—

'*In clause* 3 (3) (*c*), *the words* '' *within whose jurisdiction the holding or part thereof to which the deposit relates is situate* '' *shall be omitted.*

'*In clause* 4 (1), *the words* '' *within whose jurisdiction the land is situate* '' *shall be omitted.*

'*In clause* 4 (2) (iii), *for the words and figures* '' 1*st December* 1954 '', *the words and figures* '' 1*st December* 1953 '' *shall be substituted.*' ''

DEPUTY SPEAKER :—'' We can take up the amendment to clause 3 first and then take up amendments to clause 4.

24th August 1955] [Deputy Speaker]

"I think the House has no objection to re-open the clauses."

* SRI S. SWAYAMPRAKASAM :—"I do not know whether the Rule will allow the House to permit the re-opening of the clauses at this stage, namely, the third reading stage. Rule 113 (3) which refers to the third reading stage says . . ."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"The motion for the third reading of the Bill has not yet been moved."

* SRI S. SWAYAMPRAKASAM :—"After consideration of the Bill clause by clause, Rule 113 (3) says that the Bill so brought up for further consideration at a subsequent sitting, no amendment, not being of a verbal or consequential nature, shall be made by the Assembly. The second reading of the Bill has been finished yesterday and we are now in the third reading stage of the Bill."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"No, no."

THE HON. SRI M. A. MANICKAVELU :—"Until I move the motion for the third reading of the Bill, the second reading cannot be deemed to be over."

* SRI S. SWAYAMPRAKASAM :—"The second reading of the Bill, namely, the consideration of clauses and amendments was over yesterday itself and we were told that the third reading will be taken up to-day. Therefore except verbal or consequential amendments we cannot move other amendments now."

SRI P. RAMAMURTHI :—"Sir, before the Deputy Speaker wanted to take up the third reading of the Bill we ourselves felt that the clauses required reconsideration. Even though the particular principle of our amendments has been accepted by the Government, we thought the wording of the clauses consequent on the acceptance of the amendments might create difficulties in the actual working of the Act. Therefore, we ourselves, as a matter of fact, suggested that the third reading of the Bill might be taken up the next day and even before taking up the third reading of the Bill the clauses might be re-opened to incorporate the consequential amendments. Therefore, we have not yet finished the second reading stage of the Bill and come to the third reading stage."

DEPUTY SPEAKER :—"These amendments are only consequential amendments."

* SRI S. SWAYAMPRAKASAM :—"When the consideration of the Bill clause by clause and the amendments thereto was over, and when we adjourned the third reading of the Bill for to-day, then we can move amendments only of a verbal or consequential nature."

SRI P. RAMAMURTHI :—"Even yesterday when we wanted to take up the third reading of the Bill, it was decided that the second reading was not over and that we should take up the whole question and consider it to-day."

DEPUTY SPEAKER :—" I take it that the House gives permission to re-open clauses 3 and 4. I shall now put the amendment moved by the Hon. Minister to the vote of the House. The question is—

'In clause 3 (3) (*c*) the words " within whose jurisdiction the holding or part thereof to which the deposit relates is situate " shall be omitted.' "

The amendment was put and carried.

Clause 3 as amended was put and carried.

Clause 4.

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I move the amendment, namely :—

'*In clause 4 (1), the words " within whose jurisdiction the land is situate " shall be omitted.*' "

DEPUTY SPEAKER :—" The question is—

'In clause 4 (1), the words " within whose jurisdiction the land is situate " shall be omitted.' "

The amendment was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I move the amendment, namely :—

'*In clause 4 (2) (iii), for the words and figures " 1st December 1954 " the words and figures " 1st December 1953 " shall be substituted.*' "

DEPUTY SPEAKER :—" The question is—

'In clause 4 (2) (iii), for the words and figures " 1st December 1954 " the words and figures " 1st December 1953 " shall be substituted."

The amendment was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I move the amendment, namely :—

'*In clause 4 (4) (ii), for the words " in respect of the expenses incurred or the labour done by him during that part of the year in which the applicant was not in possession ", the words " in respect of the expenses incurred or the labour done by him during the period when the applicant was not in possession on any crop which has not been harvested " shall be substituted.*'

" The object of this amendment is, according to the previous wording of the clause, the period was only one year. Now by the amendment we accepted it has been extended for more than a year. Therefore, this change in the clause is necessary and the amendment has been moved to incorporate that change."

24th August 1955]

DEPUTY SPEAKER :—" The question is—

" **In clause 4 (4) (ii), for the words " in respect of the expenses incurred or the labour done by him during that part of the year in which the applicant was not in possession ", the words " in respect of the expenses incurred or the labour done by him during the period when the applicant was not in possession on any crop which has not been harvested " shall be substituted.'** "

The amendment was put and carried.

Clause 4 as amended was put and carried.

THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, I move—

' *That the Madras Cultivating Tenants Protection Bill, 1955 (L.A. Bill No. 11 of 1955), as amended, be passed.'* "

DEPUTY SPEAKER :—" Motion moved—

' That the Madras Cultivating Tenants Protection Bill, 1955 (L.A. Bill No. 11 of 1955), as amended, be passed.' "

SRI S. RAMALINGAM :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சென்னை ராஜ்ய குடியானவர் பாதுகாப்பு மசோதா மூன்றாவது வாசிப்பு கட்டத்திற்கு வந்திருக்கிறது. இப்பொழுது, சர்க்கார் செய்யவேண்டிய சில காரியங்களை அவர்களுடைய கவனத்திற்குக்கொண்டு வர ஆசைப்படுகிறேன். இந்த மசோதா அமுலுக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள்ளாக, நிலத்திலிருந்து வெளியேற்றபட்ட விவசாயிகள் மனுச் செய்து கொண்டால்தான் அவர்களுக்கு நிலம் கிடைக்கும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் அவகாசம் கொடுக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், அநேகமாக அதிகாரிகள் தங்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய அதிகாரத்தை பயன்படுத்துவது கிடையாது. ஆகவே சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாத காலத்திற்குள்ளாகத் தான் விவசாயிகள் மனுச் செய்து கொண்டாகவேண்டியிருக்கும். இப்பேற்பட்ட நிலைமையில், தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய விவசாயிகள் கல்வியற்றவர்களாகவும், சட்ட சபையில் நிறைவேற்றப்படும் சட்டங்களைப் புரிந்துகொண்டு தக்க நடவடிக்கை எடுக்க முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். தஞ்சாவூர் பண்ணையாள் சட்டம் வந்த பொழுது, இதே காரணத்தால் நில வெளியேற்றம் செய்யப்பட்ட விவசாயிகள் தங்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய சலுகையை மீண்டும் இழந்துவிட வேண்டிய நிலைமையில் இருந்தார்கள் என்பதை நாம் அனுபவத்தில் கண்டிருக்கிறோம். ஆகையால், இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன், எல்லா கிராமங்களிலும் 'இப்படி விவசாயி பாதுகாப்புச் சட்டம் ஒன்று கொண்டுவந்திருக்கிறோம். சாகுபடி செய்துகொண்டிருக்கும் விவசாயிகள் நிலத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட முடியாது. **1954**-ம் ஞூ டிசம்பரிலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகளை மீண்டும் நிலத்தில் அமர்த்துவதற்கான சட்டம் ஒன்று இருக்கிறது. இதன் பிரகாரம் விவசாயிகள் தங்களுடைய உரிமைகளை அடைவதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் ' என்று சர்க்கார் பிரசாரம் செய்யவேண்டும். கிராமாதிகாரிகள் மூலமாகவும் தலையாரிகள் மூலமாகவும் தண்டோரா போட்டு கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு இதைத் தெரியப்படுத்த வேண்டும். இதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 1-07 p.m.

" அடுத்தப்படியாக, விவசாயிகள் மனுச் செய்து கொள்ள வேண்டுமானால், சில கிராமக் கணக்குகள் அவர்களுக்குத் தேவைப்படும். கிராமத்தில் அவர்கள் சாகுபடி செய்த நிலத்தின் சர்வே நம்பர், **Extent** முதலானவைகள் விவசாயிகளுக்குச் சரியாகத் தெரியாது. யார் யார் நிலத்தைச் சாகுபடி செய்து கொண்டிருந்தார்கள் என்று சொல்ல முடியுமே

தவிர அந்த நிலத்தின் சர்வே நம்பர், விஸ்தீர்ணம் ஆகிய கணக்குகள் அவர்களுக்குத் தெரியாது. இது சம்பந்தமான கணக்குகளைக் கிராமாதிகாரிகளிடம் கேட்டால், அநேகமாக அவர்களுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகையால் ஒரு மாத காலத்தில் மனுச் செய்து கொள்வது என்பது மிகவும் கடினமாக இருக்கும். எங்கள் ஜில்லாவிலுள்ள சொந்த அனுபவத்தின் பேரில் விவசாயிகளுக்கு அவர்களுடைய நிலத்தின் சர்வே நம்பர், விஸ்தீர்ணம் ஆகிய விவரங்களைக் காலதாமதமில்லாமல், லஞ்சம் எதிர்பார்க்காமல் கொடுக்க வேண்டுமென்று கிராமாதிகாரிகளுக்கு சர்க்கார் உத்தரவு போட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அவர்கள் கொடுக்கத் தவறியதாக சர்க்காருக்குப் புகார் வந்தால், அவர்கள் மேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று சுற்றறிக்கை விடவேண்டும்.

"அடுத்தப்படியாக Revenue Divisional Officer தான் இந்தச் சட்டத்தின் கீழுள்ள கேஸ்களை விசாரிக்க வேண்டும். இரண்டு மூன்று தாலூகாக்களுக்கு ஒரு Revenue Divisional Officer இருப்பது வழக்கம். ஆகையால், பல மைல்களுக்கு அப்பால் கிராமத்திலிருந்து விவசாயிகள் நகரத்திற்கு வந்து கேஸ்களை நடத்தியாக வேண்டும். அதற்கு செலவு அதிகமாகும். இந்தச் செலவை அவர்கள் தாங்க முடியாது என்ற காரணத்தால், நாம் கொடுத்திருக்கக்கூடிய சலுகையை அவர்கள் இழக்கும்படியான நிலைமை ஏற்படும். ஆகையால், விவசாயிகள் தொடுத்திருக்கக்கூடிய கேஸுகளை விசாரிப்பதற்கு, Revenue Divisional Officer உடைய headquarters-க்கு விவசாயிகள் வரவேண்டுமென்று போடாமல், Revenue Divisional Officer-ஏ கிராமங்களுக்குச் சென்று கேஸ்களை விசாரித்துத் தீர்ப்பளிக்கவேண்டுமென்று உத்தரவிட்டால், இங்கு அளித்திருக்கக்கூடிய சலுகையை விவசாயிகள் ஓரளவாவது அடைவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும். ஆகையால், Revenue Divisional Officer கிராமத்திற்குச் சென்று கேஸ்களை விசாரிக்க வேண்டுமென்று உத்தரவு போட வேண்டும். அல்லது, ஐந்து ஆறு கிராமங்களைச் சேர்த்து அங்கு எடுக்க வேண்டிய நடவடிக்கையை எடுக்கவேண்டும். எல்லோரும் headquarters க்கு வரவேண்டு மென்று சொல்லாமல், சூழ்நிலைக்குத் தகுந்த பிரகாரம் பல கிராமங்களைச் சேர்த்து ஓர் குறிப்பிட்ட இடத்தில் கேஸ்களை விசாரிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

"அடுத்தபடியாக, கோர்ட்டு கட்டணம் ஒரு ரூபாய் தான் என்று மசோதாவில் போட்டிருக்கிறோம். ஆனால், நடைமுறையில் பார்க்கும்போது, Proces-fees, Court-fees இவைகளையெல்லாம் சேர்த்து ஒவ்வொரு கேசுக்கும் ரூ. 7 அல்லது ரூ. 8 வரை கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. சட்ட சபையின் சென்ற கூட்டத்தில், Court-fees and Suits Valuation Bill-ஐப்பற்றிப் பேசும்போது, அந்த மசோதா விவசாயிகளுக்கு ஒவ்வாதென்றும், அவர்கள் ஒரு கேசுக்கு ஒரு ரூபாய்க்கு மேல் கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடாதென்றும் எடுத்துச் சொன்னேன். Exhibit fees' summons fees அல்லது process fees என்று பல ரூபங்களில் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இவைகளை விவசாயிகள் தாங்க முடியாமல் கஷ்டப்படவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. Notification மூலமாகக் கட்டணத்தைக் குறைக்க சர்க்காருக்கு அதிகாரமிருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொண்டு, இந்தச் சட்டத்தின் கீழ் நடக்கும் வழக்குகளில் ஒரு ரூபாய்க்கு மேல் கட்டணம் கட்ட வேண்டியதில்லையென்று உத்தரவு போட்டால் தான் விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும். நாம் கொடுத்திருக்கக்கூடிய சலுகையை அடைவதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பமிருக்கும். இவைகளைச் சர்க்கார் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

SRI K. T. RAJU :—"இந்த மசோதா இன்னும் சில நிமிஷங்களில் சட்டமாகப் போகிறது. இது ஒரு சின்ன மசோதா. அதாவது ஒரு வருஷ காலத்திற்கான மசோதாவாக இருந்தாலும் அதன்மேல் பல விவாதங்கள் நடந்திருக்கின்றன. சர்க்கார் சார்பில் எதிர்கக்ஷியினரால் கொடுக்கப்பட்ட பல திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும்

24th August 1955] [Sri K. T. Raju]

கடைசியாக ஒரு முக்கியமான திருத்தத்தை ஏற்றுக்கொண்டதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவாக, இந்த மசோதாவின் நோக்கம் நிலச்சீர்த்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இது ஒரு ஆரம்ப நடவடிக்கை என்று தான் இந்த மசோதாவை சபையில் பிரேரேபிக்கும்போது ரெவினியு மந்திரி அவர்கள் சொன்னார்கள். ஆகையால் இந்த ஒரு வருஷம் கழிந்த பிறகு மீண்டும் ஒரு வருஷத்திற்கு இதை நீடிக்க வேண்டுமென்று மசோதா கொண்டு வராமல் எந்த நோக்கத்திற்காக இந்த மசோதா இந்த சபையில் கொண்டுவரப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறுவதற்காக ஒரு வருஷத்திற்குள்ளாகவே நிலச் சீர்த் திருத்தம் கொண்டு வருவதற்காக தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இல்லையென்றால் மீண்டும் நம் ராஜ்யத்தில் நில சம்பந்தமான தகராறுகள் ஏற்படும். இப்போது நிலச் சீர்திருத்தம் கொண்டு வருகிறோமென்று சொல்லி விட்டு இந்த நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மூன்று கட்டங்களில் நிலச் சீர்திருத்தம் வருமென்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த மூன்று கட்டங்களும் ஒரு வருஷத்தில் முடிவடைவதற்கான முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரு வருஷம் கழிந்த பிறகு அதன் ஆயுளை இன்னும் நீடிக்க வேண்டுமென்று மசோதா கொண்டு வராமல், அந்த ஒரு வருஷத்திற்குள்ளாகவே நிலச் சீர்த்திருத்தச் சட்டத்தை இந்த சபையில் கொண்டு வர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஒரு மசோதாவைக் கொண்டு வந்ததற்கு எதிர்க்கக்ஷி ஒரு சிறிய திருப்தியைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. நிலச் சீர்திருத்தம் வரக்கூடிய காலத்தில் அது மக்களுக்கும் பயன்படக்கூடியவாறு நல்ல முறையில் இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டு இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

SRI M. KALYANASUNDARAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா சட்டமாகிவிடும் என்கிற நம்பிக்கையோடு, அதை சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்பதற்காக, சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இதை அமுலாக்குவதற்கு ஜனாதிபதியின் சம்மதத்தை எவ்வளவு துரிதமாகப் பெற வேண்டுமோ அவ்வளவு துரிதமாக அந்த சம்மதத்தைப் பெற்று, இந்த சட்டமாகப் போகிற மசோதாவை சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். 1-15 p.m.

"விதிகளை இயற்றக்கூடிய காலத்தில், இந்த வழக்குகளில் விவசாயிகள் தாங்களாகவே கோர்ட்டில் வாதாடுவதற்கும் அல்லது வக்கீல்களின் உதவியின்றி விஷயம் தெரிந்தவர்கள் யாரை வேண்டுமானாலும் அழைத்துச் சென்று இந்த மாதிரி வழக்குகளில் Revenue Divisional Officer முன்பு தங்களுடைய கட்சியை எடுத்துச் சொல்வதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்க விதிகளில் இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்."

SRI P. RAMAMURTHI :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா இங்கு இன்று நிறைவேற்றப்பட்டு நாளைக்கோ அல்லது நாளைக்கு மறுதினமோ மேல் சபைக்குப் போகப் போகிறது. அங்கு '1954-ம் வருஷம்' என்பது '1953-ம் வருஷம்' என்று திருத்தப்பட்டு இந்த மசோதா இந்த சபைக்குத் திரும்பி வரக்கூடாது என்பது என்னுடைய அவா. அதற்கு வேண்டிய நடவடிக்கையை சர்க்கார் எடுத்துக்கொள்வார்களென்று நான் நம்புகிறேன்."

THE HON. SRI M. A. MANICKAVELU :—"சர்க்கார் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை."

" Mr. Deputy Speaker, Sir, as regards the remarks made by the hon. Leader of the House, I may at once state that we do not adopt any tactics of indoctrinating any set of people. It is left to them and we cannot interfere with their decision.

" The hon. Member, Sri Ramalingam, said that the Revenue Divisional Officer should not be a stationary man and he must be a sort of peripatetic officer. Sir, this Bill is intended for a short period and during that period it is very difficult to make any arrangement for the posting of such a touring officer. Therefore, it is not a practical suggestion.

" The hon. Member also wanted that process-fee should be exempted. I may inform him that even in the case of pauper suits only court-fee is waived and not the process-fee. Such being the case, how can we exempt it in the case of other people? "

SRI S. RAMALINGAM :—" On a point of clarification, Sir."

DEPUTY SPEAKER :—" The Hon. Minister is not yielding."

THE HON. SRI M. A. MANICKAVELU :—" In this case it is unreasonable to ask that process-fee should not be levied.

" Then, as regards the securing of the President's assent for this Bill quickly, of course, all efforts will be made to get the assent as quickly as possible. (Interruption from the hon. Member, Sri S. Ramalingam.)

" As regards his other suggestions, whether provision can be made for them in the rules will have to be considered.

" Sir, we are passing this legislation with the best of intention so that any unreasonable eviction should not take place and that the agricultural economy should not be rudely disturbed. But I wish to submit that whatever legislation we may pass, it is left to the parties themselves to adjust their affairs amicably and that is the best sort of legislation. This legislation which we are going to pass may go to a certain extent to solve some troubles but ultimately they will have to be solved justly, fairly and appreciably by the parties themselves.

1-20 p.m. " Sir, I will give an illustration. Take the case of a painter who wants to paint a scenery. He goes to a place with brush, paint and other materials required for painting a scenery. The scenery may be something, good or not good. But when he is actually at the point of painting the scenery, he tries to make the scenery more beautiful over and above what he actually sees. Hon. Members must remember this fact. There may be certain drawbacks in the legislation. There may be certain lacunae in the provisions of the Bill. But if the people—both the tenants and the landlords—appreciate the true spirit with which the Government have brought forward this legislation, all these drawbacks and lacunae could be overcome. The time has come for the tenants and landlords to adjust their relationship. The relationship between tenants and landlords had been so good and so cordial

24th August 1955] [Sri M. A. Manickavelu]

for hundreds of years. Therefore, I would say that having this legislation as a sort of guard, there is scope for adjusting the relationship between the landlord and the tenant. With these words, I thank the hon. Members for all the suggestions that they have made and I hope the legislation will fulfil the purpose for which it is intended. I move that the Bill be passed into law."

DEPUTY SPEAKER :—" The question is—

' That the Madras Cultivating Tenants Protection Bill, 1955 (L.A. Bill No. 11 of 1955), as amended, be passed.' "

The motion was put and carried and the Bill as amended was passed.

DEPUTY SPEAKER :—" May I know whether we can take up the next Bill? If Members have no objection, the Hon. Minister for Revenue can move the motion that the Madras City Tenants Protection (Amendment) Bill be taken into consideration."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The whole thing may be taken up to-morrow."

DEPUTY SPEAKER :—" The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow."

The House then adjourned.

IX—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

* *Pamphlet regarding Draft Second Five-Year Plan for the State of Madras.*

---

* Placed on the table on 23rd August 1955.